Puducherry / Regional Bulletin / Tamil / 18.10hrs / 25.5.2024/ Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 25.5.2024 - சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

6 மாநிலங்கள், மற்றும், 2 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 58 தொகுதிகளில் ஆறாம் கட்ட மக்களவைத் தேர்தல் வாக்குப் பதிவு இன்று அமைதியான முறையில் நடைபெற்றது.

வரும் ஜூன் 1ஆம் தேதி நடைபெற உள்ள 7ஆவது மற்றும் இறுதிக்கட்ட மக்களவைத் தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம், நாளை காலை தீவிர புயலாக வலுவடையக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்திய கடற்படையின் கிழக்கு கடற்படைப் பிரிவு தளபதி துணை அட்மிரல் ராஜேஷ் பெண்டார்கர், இன்று புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமியை மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

*ஆறாம் கட்டம் -1 (15)*

இன்று 6 ஆம் கட்டமாக நடைபெற்ற மக்களவை தேர்தலில், உத்தரப்பிரதேசத்தில் 14 தொகுதிகளிலும், ஹரியானாவில் 10, பீகார் மற்றும் மேற்கு வங்கத்தில் தலா 8, டெல்லியில் 7, ஒடிசாவில் 6, மற்றும், ஜார்கண்ட்டில் 4 தொகுதிகளும், ஜம்மு – காஷ்மீரின் 1 தொகுதி உள்ளிட்ட 58 தொகுதிகளுக்கான தேர்தல், அமைதியாகவும், விறுவிறுப்பாகவும் நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் விரிவாக செய்திருந்தது. இன்றையத் தேர்தலில், திரு. தர்மேந்திர பிரதான், திரு. மனோகர் லால் கட்டார், திருமதி. மேனகா காந்தி உள்ளிட்ட மூத்த பிஜேபி தலைவர்களும், திரு. ராஜ் பப்பர், திரு. தீபேந்தர் சிங் ஹூடா உள்ளிட்ட மூத்த காங்கிரஸ் தலைவர்கள், மற்றும், திரு. தர்மேந்திர யாதவ் உள்ளிட்ட மூத்த சமாஜ்வாதி தலைவர்கள் உள்ளிட்ட 889 பேர் களத்தில் உள்ளனர்.

இதனிடையே ஒடிசா மாநில சட்டப்பேரவையின் 42 இடங்களுக்கான 3ஆம் கட்டத் தேர்தலும், அரியானா மற்றும் உத்தரப்பிரதேச மாநிலங்களின் தலா ஒரு தொகுதிக்கான இடைத்தேர்தலும் இன்று நடைபெற்றது.

***ஆறாம் கட்டம் -2 (13)***

டெல்லியில் நடைபெற்ற தேர்தலில் குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர், முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த், மத்திய அமைச்சர்கள் டாக்டர் ஜெய்சங்கர், திரு. ஹர்தீப் சிங் புரி, காங்கிரஸ் மூத்த தலைவர்கள் திருமதி. சோனியா காந்தி, திரு. ராகுல்காந்தி, திருமதி. ப்ரியங்கா காந்தி, இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமார் உள்ளிட்டோர் தங்களது வாக்குச் சாவடிகளில் வாக்களித்தனர்.

இன்று காலை 7 மணிக்குத் தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெற்ற இத்தேர்தலில் மாலை 5 மணி நிலவரப்படி, 58 சதவிகித வாக்குகள் பதிவானதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. அதிகபட்சமாக மேற்கு வங்க மாநிலத்தில் 78 சதவிகிதமும், ஜார்கண்ட்டில் 61, உத்தரப்பிரதேசம், மற்றும் பீகாரில் தலா 52, ஜம்மு – காஷ்மீரில் 51, டெல்லியில் 54, ஒடிசாவில் 59, அரியானாவில் 56 சதவிகித வாக்குகள் பதிவாகி இருந்தன.

*ஏழாம் கட்டம் -1 (16)*

வரும் ஜூன் 1ஆம் தேதி நடைபெற உள்ள 7ஆவது மற்றும் இறுதிக்கட்ட மக்களவைத் தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்துள்ளது. தேசியத் தலைவர்கள், கட்சித் தலைவர்கள், முக்கிய பேச்சாளர்கள் தத்தமது வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 7 மாநிலங்கள் மற்றும் 1 யூனியன் பிரதேசத்தில் உள்ள 57 மக்களவைத் தொகுதிகளுக்கான தேர்தலில் 904 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். 7 கட்டங்களாக நடைபெற்ற தேர்தல்களில் பதிவான வாக்குகள் வரும் ஜூன் 4ஆம் தேதி எண்ணப்பட உள்ளன.

தேர்தல்கள் ஜனநாயகத்தில் ஒரு பெரிய கொண்டாட்டம் என்றும், எதிர்கால சந்ததியினரின் மனதில் ஜனநாயகத்தின் மதிப்புகளை வளர்ப்பதற்கான வாய்ப்பு ஆகும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தூர்தர்ஷன் செய்தி தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

இன்று ஒருநாள் பயணமாக பீகார் செல்லும் பாஜக மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டங்களில் உரையாற்றுகிறார். உத்தரப்பிரதேச மாநிலம் காசிப்பூர் தொகுதியில் நடைபெறும் பேரணியிலும் திரு. மோடி பங்கேற்கிறார்.

*ஏழாம் கட்டம் -2 (15)*

பீகார் மாநிலம் கரகட்டில் நடைபெற்ற பேரணியில் பங்கேற்ற பாஜக மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி காங்கிரசுக்கும் – இண்டி கூட்டணிக்கும் தொலைநோக்குப் பார்வை இல்லை, குழப்பம் மட்டுமே உள்ளது என்று கூறினார். மேலும் இண்டி கூட்டணித் தலைவர்கள் ஊழலில் ஈடுபட்டுள்ளதாகவும், அதன் காரணமாகவே அவர்களுக்கு எதிராக மத்திய புலனாய்வு அமைப்புகள் செயல்படுவதாகவும் அவர் கூறினார்.

முன்னதாக பாட்னாவில் பரப்புரை மேற்கொண்ட திரு. மோடி 2047ஆம் ஆண்டுக்குள் தேசத்தை வளர்ச்சி அடைந்த நாடாக உருவாக்க தாம் 24 மணி நேரமும் பணியாற்றி வருவதாக தெரிவித்தார்.

சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு. அகிலேஷ் யாதவ்-வின் மனைவி திருமதி. டிம்பிள் மற்றும் காங்கிரஸ் தலைவர் திருமதி. ப்ரியங்கா காந்தி உள்ளிட்டோர் வாரணாசியில் நடைபெற்ற சாலைப் பேரணியில் பங்கேற்றனர்.

இப்பேரணியில் கலந்து கொண்டு பேசிய திருமதி. ப்ரியங்கா காந்தி, மத்தியில் ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் தவறான கொள்கைகளால், நாட்டில் பணவீக்கம் மற்றும் வேலையின்மை

*ஏழாம் கட்டம் -3 (7)*

அதிகரித்துள்ளதாகவும், இதன் காரணமாக மக்கள் பிரச்சனைகளை சந்தித்து வருவதாகவும் கூறினார்.

காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே தமது சமூக வலைதளப்பதிவில் ஜனநாயகத்தையும், அரசியல் சாசனத்தையும் பாதுகாக்க மக்கள் சிந்தித்து வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க மக்கள் இண்டி கூட்டணிக்கு துணைநிற்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

*வானிலை -1 (17)*

வங்கக் கடலில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று மாலை புயலாக வலுவடையக் கூடும் என்றும் பின்னர் இது வடமேற்காக நகர்ந்து நாளை காலை தீவிரப் புயலாக வலுவடைந்து மேற்கு வங்கத்தின் சாகர் தீவுகளிடையே நாளை இரவு கரையைக் கடக்கக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே இந்த புயலினால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பது தொடர்பாக மத்திய அரசு தொடர் ஆலோசனைகளை மேற்கொண்டு

வருகிறது. உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மேற்கு வங்க அரசுக்கு மத்திய அரசு அறிவுறுத்தி உள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னையிலிருந்து அந்தமானுக்கு இயக்கப்படும் 2 ஏர் இண்டியா விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இதேபோல் கொல்கத்தா மற்றும் விசாகப்பட்டினத்தில் இருந்து அந்தமானுக்கு இயக்கப்படும் விமான சேவைகளும் ரத்து செய்யப் பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் தென்மேற்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முனைப்புடன் மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு. சிவ்தாஸ் மீனா அறிவுறுத்தி உள்ளார். சென்னையில் இன்று

***வானிலை -2 (6)***

நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், வெள்ளம் ஏற்படும் நீர்நிலைகள் கண்டறியப்பட்டு, வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் முழுவீச்சில் மேற்கொள்ள மாவட்ட நிர்வாகம் தயார்நிலையில் இருக்க அவர் வலியுறுத்தினார். கடலோர, தெற்கு மற்றும் மேற்கு மாவட்டங்களில் பருவமழை தொடங்கி உள்ளதை அடுத்து இந்த கூட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

*ராஜேஷ் பெண்டார்கர் (14)*

இன்று புதுச்சேரிக்கு வந்த இந்திய கடற்படையின் கிழக்கு கடற்படைப் பிரிவு தளபதி துணை அட்மிரல் ராஜேஷ் பெண்டார்கர் முதலமைச்சர் திரு. ரங்கசாமியை மரியாதை நிமித்தமாக சந்தித்தார். அப்போது திரு. ரங்கசாமி காரைக்கால் மாவட்ட மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கும்போது இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவதற்கு நிரந்தர தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கடற்படையின் செயல்பாடுகள் மற்றும் முக்கியத்துவம் குறித்த கல்வி மற்றும் விழிப்புணர்வை பள்ளி மாணவர்களுக்கு கடற்படையின் மூலமாக கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். மேலும் இந்திய கடற்படை தினத்தை புதுச்சேரியில் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் முதலமைச்சர், கேட்டுக்கொண்டார். இந்த சந்திப்பின்போது தலைமைச் செயலர் திரு. ஷரத் சவுகான், தமிழகம் மற்றும் புதுச்சேரி கடற்படை அதிகாரி திரு. ரவிகுமார் திங்ரா, மற்றும், அதிகாரிகள் உடனிருந்தனர்.

***வி.ஆர்.சவுத்ரி (8)***

தேச நலனுக்கும், பாதுகாப்புக்கும் கடற்படை வீரர்கள் முன்னுரிமை அளிப்பதன் அவசியத்தை விமானப்படைத் தளபதி ஏர் சீஃப் மார்ஷல் வி.ஆர்.சவுத்ரி வலியுறுத்தி உள்ளார். கேரள மாநிலம் எழிமலாவில் இந்திய கடற்படை நிறுவனத்தில் பயிற்சி நிறைவு அணி வகுப்பில் இன்று கலந்து கொண்ட அவர், நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் கொள்கைகளால் நாட்டின் போர் திறன்கள் மேம்பட்டுள்ளதாகக் கூறினார். 34 மகளிர் உட்பட பயிற்சி நிறைவு செய்த 216 வீரர்கள் இந்த அணிவகுப்பில் பங்கேற்றனர். இவர்களுடன் இந்தியாவின் நட்பு நாடுகளைச் சேர்ந்த 10 வீரர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

***பேட்மிண்டன் (6)***

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்று வரும் மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி.வி.சிந்து முதல் ஆட்டத்தில் 13-21, 21-16, 21-12 என்ற செட் கணக்கில் தாய்லாந்து வீராங்கனை புசானனை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதிப் பெற்றார். நாளை நடைபெற உள்ள இறுதிப் போட்டியில் சீன வீராங்கனை ஜி இ வாங்கை எதிர்கொள்கிறார்.

***ஐபிஎல் (6)***

ஐதராபாத் – ராஜஸ்தான் அணிகளுக்கு இடையே நேற்று சென்னையில் நடைபெற்ற ஐபிஎல் கிரிக்கெட் போட்டியின் 2ஆவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் ஐதராபாத் அணி 36 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. நாளை சென்னை, சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற உள்ள இறுதி ஆட்டத்தில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் மற்றும் ஐதராபாத் சன் ரைசர்ஸ் அணிகள் மோதுகின்றன.

***வில்வித்தை (5)***

தென்கொரியாவின் யெச்சியோனில் இன்று நடைபெற்ற உலகக் கோப்பை வில்வித்தை போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் பர்நீத் கவுர் , அதிதி சுவாமி மற்றும் ஜோதி சுரேகா குழு 232க்கு 226 என்ற புள்ளி கணக்கில் துருக்கி குழுவை வென்று தங்கப் பதக்கத்தையும், கலப்பு இரட்டையர் பிரிவில் ப்ரியான்ஷ் – ஜோதி சுரேகா இணை வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றின.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

6 மாநிலங்கள், மற்றும், 2 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 58 தொகுதிகளில் ஆறாம் கட்ட மக்களவைத் தேர்தல் வாக்குப் பதிவு இன்று அமைதியான முறையில் நடைபெற்றது.

வரும் ஜூன் 1ஆம் தேதி நடைபெற உள்ள 7ஆவது மற்றும் இறுதிக்கட்ட மக்களவைத் தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம், நாளை காலை தீவிர புயலாக வலுவடையக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்திய கடற்படையின் கிழக்கு கடற்படைப் பிரிவு தளபதி துணை அட்மிரல் ராஜேஷ் பெண்டார்கர், இன்று புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமியை மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.